சுருக்கம்

வீடு - வீட்டுவசதி வாரியம் - முகப்பேர் ஏரி திட்டத்தில் 4 கிரவுண்டு 90 சதுர அடி நிலத்தை "சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்திற்கு" ஒதுக்கீடு செய்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 14.3.1996-ஐ அமுல்படுத்தவது - தொடர்பாக ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

---

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

அரசாணை (நிலை) எண்.5 நாள்: 5.3.2001

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 14.3.96.
2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண். ஒதுக்கீடு 4(1)/2313/2000, நாள்: 10.11.2000 மற்றும் 17.1.2001.
3. திரு வி.சந்திரசேகரன் கடித நாள்: 11.12.2000.

---

ஆணை:-

படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணை (நிலை) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14.3.96-ல் மூன்று முறை தேசிய விருதும், அர்ஜுனா விருதும் பெற்ற முன்னாள் டென்னிஸ் விளையாட்டு வீரர் திரு வி.சந்திரசேகரின் கோரிக்கையை ஏற்று, அவர் நடத்தும் "சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்திற்கு", தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய முகப்பேர் ஏரி திட்டத்தில் 4 கிரவுண்டு 90 சதுர அடி நிலத்தை 10 ஆண்டிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியும், இந்த நிலத்திற்கு வருடாந்திர குத்தகைத் தொகை ஒரு கிரவுண்டு நிலத்திற்கு ரூ.1000/- என நிர்ணயித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேற்சொன்ன அரசாணையில் மேற்படி நிலத்திற்கான கிரையத் தொகை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்றும், மேற்படி நிலத்திற்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதல் பெற்று, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் மாற்ற வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

2) தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் படிக்கப்பட்டவை இரண்டில் காணும் அவரது கடிதத்தில் மேற்படி நிலத்திற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்யும் நிலையில் உள்ளது என்று தெரிவித்து,

இந்நிலத்திற்கான கிரைய தொகை ரூ.31.79 இலட்சத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டார்.

3) மேற்கண்ட அரசாணை (நிலை) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14.3.96–ஐ அமுல்படுத்துவதில் உள்ள பல்வேறு சிக்கல்களை களையும் பொருட்டு, 30.1.2001ஆம் நாளன்று செயலர், வீட்டுவசதித் துறை, செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்பு செயலர், நிதித் துறை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஆகியோர் விவாதித்து எடுத்த ஒருமித்த முடிவுகள் அடிப்படையில், கிழ்க்கண்ட ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-

i) முகப்பேர் ஏரி திட்டத்தில், 2000-2001ஆம் ஆண்டுக்கு, ஒரு கிரவுண்டு நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.3.60 இலட்சம் என்று கணக்கிட்டு, சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 4 கிரவுண்டு 90 சதுர அடி நிலத்திற்கு ரூ.14.53 இலட்சம் என விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

ii) இந்நிலத்திற்கான கிரையத் தொகை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அரசாணை (நிலை) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 14.3.96-ல் வெளியிடப்பட்ட ஆணை தற்போது இரத்து செய்யப்படுகிறது. மேற்கண்ட நிலத்திற்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கிரையத் தொகை ரூ.14.53 இலட்சத்தை அரசு தரிசு நிலங்களை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு மாற்றம் செய்ததற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் ஈடுசெய்து கொள்ள வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

iii) இந்நிலத்தை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் என படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டது. ஆனால் முகப்பேர் ஏரி திட்டத்தில் உள்ள நிலம் திருவள்ளுவர் மாவட்ட எல்லைக்குட்பட்டது என தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலம் சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்தால் முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை கண்டறியவும், அவ்வாறு பயன்படுத்தப்படவில்லையெனில் இந்த இடத்தில் வேறு விளையாட்டு வசதிகளை உருவாக்கவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால்தான் இயலும். எனவே இந்த நிலத்தை "சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்"திற்கு குத்தகைக்கு கொடுக்க ஏதுவாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் என அரசு தற்போது ஆணையிடுகிறது.

iv) இந்நிலத்திற்கான விற்பனை ஆவணத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்க ஏற்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணச் செலவையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்நிலத்தை சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்திற்கு

வழங்கும் பொருட்டு குத்தகை ஆவணம் பதிவு செய்ய ஏற்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணச் செலவையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிதியிலிருந்து முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்கண்ட செலவுகள் செய்த பின்னர் இத்தொகையை அரசிடமிருந்து திரும்பப் பெற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட வேண்டும்.

4) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர், அரசாணை (நிலை) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 16.3.96-ல் ஏற்கனவே ஆணையிடப்பட்டவாறு, முகப்பேரி ஏரி திட்டத்தில் 4 கிரவுண்டு 90 சதுர அடி நிலத்தை சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்திற்கு வருடாந்திர குத்தகை தொகை ஒரு கிரவுண்டு நிலத்திற்கு ரூ.1000/- என்ற அடிப்படையில், குத்தகை ஆவணம் பதிவு செய்த நாளிலிருந்து பத்து ஆண்டிற்கு குத்தகை அடிப்படையில் இந்த நிலத்தை வழங்க வேண்டும்.

5) இந்த அரசாணை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அ.சா. எண்.267/செ/2001, நாள்: 22.2.2001 மற்றும் நிதித் துறை அ.சா. எண்.76/SS(GV)/2001, நாள்: 5.2.2001 மற்றும் 692/F3/P/2001, நாள்: 28.2.2001-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

கெ.அஷோக் வர்தன் ஷெட்டி,<br>அரசுச் செயலர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,<br>சென்னை-35.

உறுப்பினர் செயலர்,<br>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,<br>சென்னை-84.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர்.<br>மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை.<br>மாநிலக் கணக்காயர், சென்னை-18.<br>சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், சென்னை-35/79/9.

நகல்: நிதித் துறை, சென்னை-9.

" வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை-9.

" இயக்குநர்,
சந்திரா டேபிள் டென்னிஸ் பயிற்சி மையம்,
14, லஸ் அவின்யூ, மைலாப்பூர், சென்னை-4.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.